தெய்வத்துள் வைக்கப்பட்ட

சிவ பக்தை



திருவிளையாடல் புராண ஆராய்ச்சி மையம்

திருப்பாலை, மதுரை 625014

பதிவு எண் 1392/ IV /2010

திருவிளையாடல் புராணம்

(36. இரசவாதஞ் செய்த படலம்)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும். (குறள் - ருய)

இந்த வாக்கிற்கு இணங்க, மானிடப் பிறவி எடுத்துத் தெய்வ நிலைக்கு உயர்ந்தவர் **ஸ்ரீ பொன்னனையாள்**. திருப்பூவணம் திருக்கோயிலில் நடனமாடுவதைத் தொழிலாகக் கொண்டவர் இவர். இவரது உருவம் கோபுர விமானத்தின் மேலே வைத்துக் கொண்டாடி வணங்கப்படுகிறது. இவர் செய்து கொடுத்த உற்சவமூர்த்தம் தேரில் வலம் வந்து மக்களுக்கு அருள் பாலிக்கின்றது.



ஸ்ரீ பொன்னனையாள் அருள்மிகு திருப்பூவண நாதரின் மேல் கொண்ட அன்பினாலும், அடியார்களுக்கு அவள் செய்து வந்த அன்னதானத்தின் சிறப்பினாலும், சிவபெருமானே ஒரு சித்தர் வடிவில் வந்து அவளுக்குக் காட்சி அருளியுள்ளார். இரசவாதம் செய்து அவளது வீட்டிலிருந்த உலோகப் பாத்திரங்களை யெல்லாம் தங்கமாக மாற்றியுள்ளார். கிடைத்த அந்தத் தங்கத்தைக் கொண்டு ஸ்ரீ பொன்னனையாள் திருப்பூவணம் உற்சவமூர்த்தியைச் செய்து, தேர்த் திருவிழாவும் நடத்தியுள்ளார். ஸ்ரீ பொன்னனையாளின்

திருவுருவம் கோயிலின் நுழைவாயிலில் கொடிமரத்திற்கு அருகே உள்ளது. தெய்வநிலையை அடைந்த ஸ்ரீ பொன்னனையாளின் திருவுருவமும் அவளது தோழியர் இருவரின் திருவுருவமும் அருள்மிகு திருப்பூவணன் சிவலிங்கத்திற்கு மேலேயுள்ள விமானத்தில் தெய்வங்களுடன் இடம் பெற்றுள்ளன. தெய்வத்தை மனதில் சதா சர்வ காலமும் நினைத்துக் கொண்டிருந்தால், “மனிதனும் தெய்வமாகலாம்” என்பதற்குத் திருப்பூவணம் ஸ்ரீ பொன்னனையாள் சாட்சியாக விளங்குகிறாள்.



திருப்பூவணத் தலத்தின் பெருமை -பைந்தமிழ்ப் பாண்டி நாட்டிலே மதுரைக்கு அருகே திருப்பூவணம் என்னும் பெயர் கொண்ட ஒரு சிவத்தலம் உள்ளது. அங்கு, வைகை ஆற்றின் தென்கரையில் பூஞ்சோலையில் சிவபெருமான் சிவலிங்க வடிவாய் எழுந்தருளியுள்ளார்.

அத்தலத்தில் அசையும்பொருள் அசையாப்பொருள் எல்லாமும் சிவலிங்க வடிவம் என்று கருதிக் கோள்களும் விண்மீன்களும் சற்று விலகிச் செல்லுகின்றன[1]. இந்திரன், சூரியன் முதலிய பல தேவர்கள் வந்து வழிபட்டு அவரவர் விரும்பிய வரங்களைப் பெற்றுள்ளனர். இத்தகைய திருப்பூவணம் அற்புதங்கள் பல நிறைந்தது!

நாட்டியப் பேரொளி ஸ்ரீ பொன்னனையாளின் தன்மை

கிளிகள் நிறைந்து வாழும் சோலை சூழ்ந்த திருப்பூவணப் பெருமானின் திருக்கோயிலிலே உருத்திர கணிகையர்கள்[2] பலர் பணியாற்றுகின்றனர். அவர்களுள் பொன்னனையாள் என்னும் பெண் ஒருத்தி இருந்தாள். அவள், உருத்திர கணிகையர்களின் தவப்பயன் போன்றவள். வாசம் மிகுந்த கூந்தலை உடைய தெய்வப் பெண் அவள். தேவர்களும் மயங்கும்படியான அழகுடையவள். ஏழு இசைகளுடன் யாழ் மீட்டிப் பாடுவதிலும், பரதநூல் முறைப்படி நடனம் ஆடுவதிலும் மிக வல்லவள். பெண்களுக்குரிய அழகின் தன்மையினும், பிற பண்புகளினாலும் அவள் அரம்பை மகளிரை ஒத்தவள். "அரன் நெறியே அறநெறி" என்று உணர்ந்து

---

[1] இத்திருத்தலத்தில் நவக்கிரகங்களும் விலகிச் செல்லுகின்ற காரணத்தினால் அருள்மிகு திருப்பூவணநாதரை வணங்கினால் கிரகதோஷங்கள் விலகிச் சென்றுவிடும். கிரகதோஷங்கள்நீங்கத் திருப்பூவணம் ஒரு பரிகாரத் தலம் ஆகும்.

[2] உருத்திரகணிகையர் - இவர்கள் முன்னொரு காலத்திலே தாருக வனத்தில் பிட்சாடன வடிவோடு சென்ற சிவபெருமான் அங்குள்ள இருடி பத்தினிகளை அன்போடு நோக்க, அவர்கள் கருப்பமுற்றுப் பெற்ற பெண்கள் ஆவர். இந்த உருத்திரகணிகையர் ஆலயத்து எழுவகை நடனமாதருள் முதலானவர்; தேவதாசியுமாம்.

வாழ்பவள். புண்ணியமான சிவநெறியில் நடக்கும் தன்மையினால் அரம்பை மகளிரினும் மேலானவள். இத்தகைய சிறப்புகளுடன் விளங்கிய பொன்னனையாள் நாள்தோறும் விடியும் முன்னே எழுந்து, தன் தோழியர்களுடன் வைகை ஆற்றின் தூய நீரிலே மூழ்கிச் சிவபூசை செய்வாள்.



பூசை முடித்துத் திருக்கோயிலை அடைந்து அருள்மிகு திருப்பூவண நாதரை வணங்கிப்

பரதநாட்டியத்தில் ஒரு பிரிவான சுத்தநிருத்தம்[3] என்ற நடனத்தை ஆடுவாள்.



பிறகு வீட்டிற்கு வந்து, சிவனடியார்களே சிவபெருமான் ஆவர் என்று எண்ணி, அடியார்களைச் சிவபெருமான் எனப் பாவித்து, அவர்களைப் பணிந்து வரவேற்றுப் பூசித்து, அவர்கள் மகிழுமாறு இனிய சுவையான உணவு வழங்குவாள். அடியார்கள் அனைவரும் உணவு உண்ட பின்னர் எஞ்சியிருப்பதை உண்பாள். இதுவே அவள் நியமித்துக் கொண்ட வாழ்க்கை ஆகும்.

சிவபெருமானின் திருவுருவத்தைச் செய்ய எண்ணுதல்

இவ்வாறு சிவனடியார்களையே சிவபெருமான் என்று பாவித்துப் பொன்னனையாள் வாழ்ந்துவரும்

---

[3] சுத்த நிருத்தம் - சொக்க நடனம் : இது சாந்தமாக ஆடும் சாந்திக் கூத்தின் வகை நான்கனுள் ஒன்று; நூற்றெட்டுக் கரணமுடையது. இனி மத்தளம் முதலியன இன்றிச் செய்யப்படும் நிருத்தமுமாம்.

நாளிலே, அவளுடைய அன்பை உலகத்தார் அனைவரும் அறிய வேண்டும் எனச் சிவபெருமான் திருவுள்ளம் கொண்டார். "திருப்பூவணநாதரின் திருவுருவத்தைத் தங்கத்தில் செய்ய வேண்டும்" என்ற ஆசையை அவளது மனத்தில் உருவாக்கினார். இதனால், பொன்னனையாள் திருப்பூவணநாதரின் திருவுருவை மெழுகினால் செய்து, மெழுகுப் பதுமையின் மேல் வையை ஆற்றின் களிமண்ணைப் பூசி, அதைச் சுட்டு எடுத்து, திருப்பூவணநாதரின் உருவத்தைத் தங்கத்தினால் செய்வதற்குத் தேவையான ஒரு கருவை[4] செய்து வைத்திருந்தாள்.



நாள்தோறும் ஆடல்பாடல் முதலியவற்றால் கையில் கிடைக்கும் பொருள் யாவும் அடியார்களின் அன்னதானத்திற்கே செலவானது. சிறிதும் மிஞ்சவில்லை.

---

[4] கரு = Mould, வார்ப்பு, அச்சு, வார்ப்பு உருவம்

இதனால், சிவபெருமானின் திருவுருவைத் தங்கத்தால் வார்த்து எடுக்க இயலவில்லையே என்று கருதி வருத்தமுற்றாள்.

குலபூடண பாண்டியனுக்கு எடுக்க எடுக்கக் குறையாத தங்கக் காசுகள் நிறைந்த பொற்கிழியைச் சோமசுந்தரக் கடவுள் கொடுத்ததை மனத்திலே சிந்தித்து இருந்தாள். சிவபெருமான் அவளது வருத்தத்தைப் போக்கத் திருவுளம் கொண்டார்.

சிவபெருமான் சித்தராகத் திருப்பூவணம் வருதல்

ஒரு நாள் சிவபெருமான், தூய திருநீறு அணிந்த திருமேனியுடன், கட்டவாங்கம் மழு இவற்றை ஏந்திக் கொண்டு, யோகபட்டியை இடுப்பில் கட்டிக் கொண்டு, கோவணம் மீது ஆடை அணிந்து கொண்டு, விபூதிப்பையுடன், பவளம் போன்ற சிவந்த சடை முடியுடன் ஒரு சித்தராக வேடம் கொண்டார். மதுரையிலிருந்து புறப்பட்டுத் திருப்பூவணம் வந்து[5], பொன்னனையாளின் வீட்டினை அடைந்தார்.

அங்கே, அன்னதானம் நடைபெற்றுக் கொண்டு இருந்தது. அடியார்கள் கூட்டம் அளவில்லாமல் நிறைந்து இருந்தது. சித்தர் வடிவில் வந்த சிவபெருமான் அடியார்களோடு கூடித் திருவமுது செய்யாமல், திருவுள்ளத்தில் ஏதோ ஒன்றைக் கருதியவராய் அருகே இருந்த ஒரு சிறு அறைக்குள் போய்த் தங்கி இருந்தார். சிவனடியார்கள் எல்லாரும் திருவமுது செய்துகொண்டு திரும்பிச் சென்று விட்டனர்.

---

[5] மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் இருந்து திருப்பூவணம் அருள்மிகு திருப்பூவணன் திருக்கோயில் 18 கி.மீ. தொலைவில் உள்ளது.

அப்போது, தனித்து இருந்த சித்தரைப் பொன்னனையாளின் தாதியர்கள் கண்டு வணங்கி, "ஐயனே! திருவமுது செய்ய உள்ளே எழுந்தருளவேண்டும்" என்று வேண்டினர். அதற்குச் சித்தர், "அமுதம் போன்ற உங்கள் தலைவியை இங்கே அழைத்து வாருங்கள்" என்றார். சித்தரின் உத்தரவைப் பொன்னனையாளிடம் சென்று கூறினர். உடனே பொன்னனையாள் சித்தர் திருமுன் சென்று, "தேவரீர் வரவு நல்வரவாகுக" என்று கூறிச் சித்தருக்கு அருக்கியமும் ஆசனமும் கொடுத்துத் திருவடிகளில் வீழ்ந்து வணங்கித் தலைக்கு மேலே கைகளைக் கூப்பித் தொழுதாள். சித்தமூர்த்திகள் அன்புடன் பொன்னனையாள் மீது திருநோக்கம்[6] வைத்து அருளினார்.

குசலம் விசாரித்தல்

பொன்னனையாள் சித்தமூர்த்திகளை நோக்கி, "எம் பெருமானே! உள்ளே எழுந்தருள்க; தாங்கள் விரும்பும் தொண்டினைச் செய்வேன்" என்று கூறி வணங்கினாள். பேரழகுடைய நீ சிறிது உடல் மெலிந்திருக்கின்றாய்; அதன் காரணம் யாது?" என்று சோமசுந்தரக் கடவுளாகிய சித்தமூர்த்திகள் குசலம் விசாரித்தார்.

அதற்குப் பொன்னனையாள், "எம்பெருமானே! அடியேற்கு வேறு ஒரு மெலிவும் இல்லை; எங்கள் தலைவராகிய திருப்பூவணநாதரின் திருவுருவத்தினைச் செய்வதற்கு விருப்பங்கொண்டு, மெழுகினால் கருக்கட்டி வைத்தேன்; அதனைப் பொன்னினால் செய்து முடிக்கக் கருதியுள்ளேன். ஆனால், நாள்தோறும் என் கையில் வரும்

---

[6] இங்குத் திருநோக்கம் என்பது 'சட்சு தீட்சை (பார்வையால் தீட்சை அளித்தல்)' ஆகும்.

பொருள் முழுதும் அடியார்களுக்கு அமுது செய்விப்பதிலேயே செல்கின்றன; சிறிதும் எஞ்சவில்லை" என்றாள்.



அடியார்களுக்கு அன்னதானத்தின் சிறப்பு கூறல்

பொன்னனையாள் கூறிய இன்சொல்லைக் கேட்டுச் சித்தர் மகிழ்ந்தார். "பெண்ணே! நீ யாக்கையும்

இளமையும் செல்வமும் நீர்க்குமிழி போலச் சிறிதும் நிலையில்லாதவை என்று உணர்ந்தாய்; தருமம் ஒன்றே நிலையுடையது என்று துணிந்தாய்; தருமங்களுள் சிவதருமமே சிறந்தது என்றும், சிவதருமத்துள் சிவ பூசையே சிறந்தது என்றும், சிவ பூசையுள் மகேசுர பூசையே சிறந்தது என்றும் தெளிந்து மகேசுர பூசை செய்கின்றாய்; ஆதலால், நீ இம்மைப் பயனையும், மறுமைப் பயனையும் பெற்றுக் கொண்டாய். பொன்னனையாள் என்னும் உன் பெயருக்கேற்றவாறு அழிவில்லாத இறைவன் திருவுருவைப் பொன்னாற் செய்யப் பெறுவாயாக என்று வாழ்த்தினார்.

“நீ, உன் வீட்டில் உள்ள பித்தளைப் பாத்திரம், ஈயப் பாத்திரம் முதலிய எல்லாவற்றையும் இங்கே கொண்டு வா" என்று கூறியருளினார்.

இரசவாதம் செய்தல்

உடனே பொன்னனையாள் வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், பித்தளை, வெண்கலம், தகரம் முதலியவற்றைச் சித்தர் முன்பு வைத்தாள். “இவை யாவும் பொன்னாக' என்று சிந்தித்து, அந்தப் பாத்திரங்களின் மீது சித்தர் திருநீற்றினைச் சிதறினார். "நீ இவற்றை இன்றிரவு நெருப்பிலிட்டால் பொன்னாகிவிடும்” என்றார். பொன்னனையாள், "எம்பெருமானே! தாங்கள் இன்றைக்கு இங்கே தங்கியிருந்து இதைச் செய்து முடித்துப் போவீராக" என்று வேண்டினாள். அங்கயற்கண் அம்மையைச் சிறிதும் பிரியாதவராகிய சோமசுந்தரப் பெருமானார் அதற்கு உடன்படாமல், "யாம் மதுரையில் வசிக்கும் சித்தர்" என்று கூறி மறைந்தருளினார்.



பொன் உருக்குதல்

சித்தர் மறைந்து போயினாரே என்று பொன்னனையாள் சிறிது மனஞ் சோர்ந்தாள்; ஆனால் சித்தராய் வந்தவர் வெள்ளியம்பலத்திலே கால்மாறி ஆடும் சோமசுந்தரக் கடவுளே என்று உணர்ந்து கவலையை நீக்கினாள். பிறகு சித்தர் சொல்லிய வண்ணம் உலோகப் பாத்திரங்களைத் தீயில் புடமிட்டாள். ஆணவமலம் கெட்டு இறைவனின் திருவடி நீழல் அடைந்தவர் சிவமாக விளங்குதல் போல உலோகங்கள் நெருப்பினைச் சேர்ந்தவுடன், களிம்பு நீங்கிப் பொன்னாக மாறின.

பொன்னனையாள் பொன்னால் இறைவனை வார்த்து எடுத்தல்

உருகி வந்த பொன்னைக் கொண்டு, வடிவமே இல்லாத இறைவனின் திருவடிவத்தைப்

பொன்னனையாள் வார்த்து எடுத்தாள். அருள்மிகு திருப்பூவணநாதரின் திருவுருவின் பேரழகைக் கண்டு "அச்சோ! அழகிய பிரானே" என்று சொல்லிக் கன்னத்தைக் கிள்ளி முத்தமிட்டாள். திருவுருவத்தைத் தேரில் வைத்துத் திருவிழாவும் நடாத்தினாள். சில நாள் சென்றபின் முத்தி அடைந்தாள்.



இறைவன் நகக் குறியுடன் விளங்குதல்

பொன்னனையாள் கிள்ளிய நகக் குறியைத் திருப்பூவணநாதர் உற்சவமூர்த்தியின் கன்னத்தில் இன்றும் நாம் காணலாம். 'அழகிய பிரானே' என்று அழைத்த காரணத்தால், உற்சவருக்கு "அழகிய பிரான்" என்ற காரணப் பெயர் உண்டாகி விளங்கி வருகிறது. பொய் யுகமாகிய இந்தக் கலியுகத்திலே பொன்னாலாகிய திருமேனி வடிவில் அருள்மிகு திருப்பூவணநாதர் எழுந்தருளி அனைவருக்கும் இன்பம் நல்கி வருகின்றார்.

வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டவள்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும். (குறள் - ருய)

என்ற திருக்குறளுக்குச் சான்றாகத் திருப்பூவணம் ஸ்ரீ பொன்னனையாள் போற்றி வணங்கப்படுகிறாள். அவள் செய்து கொடுத்த உற்சவமூர்த்தி தேரில் ஏறி உலா வருகிறது. திருவீதி உலாக்களும், தேர்த் திருவிழாவும் நடைபெறுகிறது.



அருள்மிகு திருப்பூவணநாதர் சிவலிங்கத்தின் மேலேயுள்ள விமானத்தில் கிழக்குப் பகுதியில் தெய்வ உருவங்கள் உள்ளன. மேற்குப் பகுதியில் நரசிங்கப் பெருமாளும், அருகில் சித்தர் திருவுருவமும், ஸ்ரீ பொன்னனையாள் திருவுருவம் உள்ளன. தமிழர் சாதி

பார்க்கவில்லை, குலத் தாழ்ச்சி உயர்ச்சி செய்யததில்லை என்பதற்குச் சான்றாகத் திருப்பூவணம் உள்ளது.

திருப்பூவணம் திருத்தலச் சிறப்புகள்

திருப்பூவணப் புராணம், திருவிளையாடற் புராணம் திருமுறைப் பாடல்கள் இவற்றில் கூறப்பட்டுள்ள சிறப்புகள்.

1. அறிந்து செய்த பாவங்களைப் போக்கும் சிவலிங்கம்.
2. கோடி வருடம் பூமிக்குள்ளே புதைந்திருந்த சிவலிங்கம்.
3. பார்வதி தேவியார் தவம் செய்ததால் சுயம்புவாகப் பூமியில் முளைத்த ஜோதிர் லிங்கம்.
4. கல் இல்லை, பாரிசாதப் பூவால் ஆன சிவலிங்கம்.
5. நறுமலர் கொண்டு வணங்குபவருக்கு அரச பதவி வழங்கும் சிவலிங்கம்.
6. மடப்புரம் காளி வணங்கிய சிவலிங்கம்.
7. மூவேந்தர்களும் ஒன்றாய் வந்து திறை செலுத்தி வணங்கிய சிவலிங்கம்.
8. எலும்பு பூவாக மாறிய திருத்தலம்.
9. பிதிர்களுக்கு முத்தி அளிப்பதில் காசியைவிடச் சிறந்த திருத்தலம்.
10. மதுரையிலிருந்து சிவபெருமான் சித்தர் வடிவில் வந்து இரசவாதம் செய்த திருத்தலம்.
11. சமணர்களை வெல்ல மதுரை செல்லும் முன்பு, திருஞானசம்பந்தர் வழிபட்ட திருத்தலம்.

12. சமணர்களை வெற்றி கொண்ட பின்பு திருஞானசம்பந்தர் வழிபட்ட திருத்தலம்.

13. திருஞானசம்பந்தருக்கு ஆற்று மணல்கள் எல்லாம் சிவலிங்கங்களாகக் காட்சியளித்த திருத்தலம்.

14. நந்தியைச் சாய்ந்திருக்கச் சொல்லித் திருஞானசம்பந்தருக்கு சிவலிங்கம் காட்சியளித்த திருத்தலம்.

15. மூவர் தேவாரமும் பெற்ற பாண்டியநாட்டுத் திருத்தலம்.

16. தியானகாட்ட முனிவர், மாத்தியாந்தினி முனிவர், கோரக்கச் சித்தர், கத்திரிகாய் சித்தர் இவர்களின் சீவசமாதிகள் உள்ள திருத்தலம்.

இச்சிறப்புகளையும் இன்னும் எண்ணிலடங்காச் சிறப்புகளையும் பெற்றது **திருப்பூவணம்** (மதுரைக்கு அருகில் உள்ள திருப்புவனம்).

- மதுரையில் சமணர்களின் ஆதிக்கம் ஓங்க ஆரம்பித்தபோது, திருஞானசம்பந்தரை அழைத்து வரச் செய்தார் மங்கையர்க்கரசியார்.

- திருப்பூவணம் மதுரைக்குக் கிழக்கு வாயிலாகும். மதுரை சோமசுந்தரரை வணங்குவதற்கு முன் திருப்பூவணநாதரை வணங்குவது சிறப்புடையது.

- வைகை ஆற்றின் மணல்கள் எல்லாம் சிவலிங்கங்களாகக் காட்சியளித்ததால், சம்பந்தர் ஆற்றில் கால் வைக்காமல் "ஆடித்தபசு மண்டபம்" இருந்த இடத்திலிருந்தே பதிகம் பாடினார்.

- அவருக்காகத் திருப்பூவணநாதர் நந்தியைச் சாய்ந்திருக்கச் சொல்லிக் காட்சியளித்தார். இன்றும் நந்தி இலிங்கத்தை மறைக்காமல் சாய்ந்தே இருக்கும்.

- ஆற்றின் நடுவே சிதைவடைந்து கிடக்கும் ஆலயத்தை மீண்டும் கட்டுவோருக்கு நான்கு மடங்கு புண்ணியம் கிடைக்கும்.
- திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், கருூர்த்தேவர், அருணகிரிநாதர் மற்றும் குமரகுருபரர் ஆகியோரும் இத்தலத்தைப் பாடிப் பணிந்துள்ளனர்.

பிதிர் முத்தி புரம்

- பிறந்தால் முத்தி, வாழ்ந்தால் முத்தி, நினைத்தால் முத்தி, இறந்தால் முத்தி என முத்தி அளிக்கும் திருத்தலங்கள் உள்ளன.
- திருப்பூவணம் '**பிதிர்களுக்கு முத்தி**' அளிக்கும் பிதுர் முத்திபுரம் ஆகும். '**திருப்பூவணக் காசி**' என்று அழைக்கப்படுகிறது.
- காசியை விட வீசம் (சிறிது) கூடுதல் சிறப்புடையது.
- இங்கு திதி, தர்ப்பணம் செய்தால் இறந்த முன்னோர்கள் நேரில் வந்து பெற்றுக்கொண்டு ஆசி வழங்குவர்.
- அஸ்திக் கலயத்தில் உள்ள எலும்பு பூவாக மாறிய தலம்.

திருப்பூவணன் பெயர்க் காரணம்

இத் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவலிங்கத்திற்குப் பூவணன் என்று பெயர். அணன் என்பது ஆண் தெய்வத்திற்கான பெயர். பூவணன், வீரணன், கருப்பணன், தீவணன், தேவணன், சிலம்பணன், பாவணன், இராவணன், அண்ணன் முதலான பெயர்ச் சொற்கள் உள்ளன.

பூ+அணன் = பூவணன் = பூ தெய்வம், பூவினால் ஆன தெய்வம்,

வீர்+அணன் = வீரணன் (வீரத்திற்கான தெய்வம், முருகனின் தளபதிகளுள் ஒருவர்?)

கருப்பு+அணன் = கருப்பணன் = கருப்புசாமி

தீ+அணன் = தீவணன் = நெருப்பு தெய்வம்.

தேவ+ அணன் = தேவணன் = தேவர்களின் தெய்வம்,

சிலம்பு+அணன் = சிலம்பணன்

பா+அணன் = பாவணன்

இரா+அணன் = இராவணன் (இரவு, இருட்டு தெய்வம்)

அண்+அணன் = அண்ணன் (அண்மையில், அருகில் உள்ள தெய்வம்)

எனப் பிரித்துப் பொருள் கொண்டால், அணன் என்பது "ஆண்தெய்வம்" என்ற பொருளில் வருகிறது.

திருப்பூவணம் பெயர்க் காரணம்

'அம்' என்பது இடத்திற்கான பெயர் விகுதி. சிதம்பரம், குற்றாலம், திருப்பூணம். அன் என்ற விகுதி பெற்றுப் பூவணன் என்றும், அம் என்ற விகுதி பெற்றுப் பூவணம் என்றும் காரணப்பெயர்கள் உண்டாகியுள்ளன. எனவே பூவணன் மேவியது பூவணம் என்றானது.

பூவ"ண"ம் என்ற சொல்லை வடமொழியில் (புராணத்தில்) எழுத முடியவில்லை. காரணம், வடமொழியில் ந,ண,ன என்ற வேறுபாடு இல்லை. வடமொழியில் உள்ள எழுத்துகளில் னகரம் மட்டுமே உள்ள காரணத்தினால் ஏற்பட்ட பிழை இது. எனவே பூவ"ண"ம் என்ற சொல்லை பூவ"ன"ம் என்றுதான் எழுத முடியும். இதனால் பூவணம் என்ற சிறந்த தமிழ்ச் சொல் பூவனம் என்ற வடசொல்லாகி, பூக்கள் நிறைந்த காடு என்ற பொருளில் ஆகிவிடுகிறது. பூவனம் என்ற

பொருளில் புஷ்பவனம், புஷ்பவனேசுவரர் என்ற பெயர்கள் உள்ளன.

பூ ஆகிய தெய்வம் "பூவணன்" என்றானது. திருப்பூவணத்தில் உள்ள மூலலிங்கம் பாரிசாதப் பூவால் ஆனது. பாரிசாதப் பூவின் காம்பு படிமம் ஆகிச் சிவலிங்கமாக உள்ளது. "பூவால் ஆகிய சிவலிங்கத்திற்குப் பூவணன்" என்ற காரணப் பெயர் உண்டானது. பூவணன் மேவிய காரணத்தினால் ஊரின் பெயர் 'அம்' விகுதி பெற்றுப் பூவணம் என்று அழைக்கப்படுகிறது.

திருப்பூவணம் என்ற பொருள் பொதிந்த காரணப்பெயர் திருப்பூவனம் திருப்புவனம் என்றெல்லாம் அழைக்கப்பட்டு வருகிறது. திருப்பூவணம் என்று சொல்லுவதும் எழுதுவதுமே சரியாகும்.

தல இருப்பிடம் – திருப்பூவணம் என்ற பெயர் மருவித் தற்போது திருப்புவனம் (Thiruppuvanam 630116) என்று அழைக்கப்படுகிறது. இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில், மதுரையிலிருந்து 18கி. மீ. தூரத்தில் மதுரை-இராமேசுவரம் தேசிய நெடுஞ்சாலையில் உள்ளது.

செல்லும் வழி - மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திலிருந்து மானாமதுரை. பரமக்குடி. இராமநாதபுரம். மண்டபம் மற்றும் இராமேசுவரம் செல்லும் பேருந்துகள் திருப்பூவணம் வழியாகச் செல்கின்றன. மதுரை பழைய பேருந்து நிலையத்திலிருந்து அதிகமான எண்ணிக்கையில் நகர்ப்பேருந்துகள் செல்கின்றன. மதுரையிலிருந்து மடப்புரம் செல்லும் நகரப் பேருந்துகளும் திருப்பூவணம் வழியாகச் செல்கின்றன. மேலும். மதுரை-இராமேசுவரம் இருப்புப் பாதையில் திருப்பூவணம் இரயில் நிலையம் உள்ளது. பயணி வண்டிகள் நின்று செல்கின்றன.

திருவிளையாடற் புராணம்

(36. இரசவாதஞ் செய்த படலம்)

1856.
வரதன் மீனவன் படை இடை வந்து நீர்ப் பந்தர்
விரதன் ஆகி நீர் அருந்திய வினை செய்ததும்
பரத நூலியன் நாடகப் பாவையாள் ஒருத்திக்
இரத வாதம் செய்து அருளிய ஆடலை இசைப்பாம்.
1857.
பரும் கை மால்வரைப் பூமியன் பைந்தமிழ் நாட்டின்
இரங்கு தெண் திரைக் கரங்களால் ஈர்ம் புனல் வைகை
மருங்கில் நந்தனம் மலர்ந்த பன் மலர் தூ உய்ப் பணியப்
புரம் கடந்தவன் இருப்பது பூவண நகரம்.
1858.
எண்ணில் அங்கு உறை சராசரம் இலிங்கம் என்று எண்ணி
விண்ணின் நால்களும் கோள்களும் விலங்குவது யாக்கைக்
கண்ணினான் கதிர் முதல் பல கடவுளர் பூசை
பண்ணி வேண்டிய நல்வரம் அடைந்தது அப்பதியில்.
1859.
கிளிஉளார் பொழில் பூவணக் கிழவர் தம் கோயில்
தளி உளார் தவப் பேறு எனா அடாது கு பூந்தார்
அளி உளார் குழல் அணங்கு அனாள் அந்தரத்தவர்க்கும்
களி உளார் தர மயக்கு உறூம் கடல் அமுது அனையாள்.
1860.
நரம்பின் ஏழ் இசை யாழ் இசைப் பாடலும் நடநூல்
நிரம்பும் ஆடலும் பெண்ணல நீர்மையும் பிறவும்
அரம்பை மாதரை ஒத்தனள் அறநெறி ஒழுகும்
வரம்பினால் அவர் தமக்கு மேல் ஆயினாள் மன்னோ.
1861.
ஆய மாதர் பேர் பொன் அனையாள் என்பவள் தன்
நேய ஆய மோடு இரவின் இருள் நீங்கு முன் எழுந்து
தூய நீர் குடைந்து உயிர் புரை சுடர் மதிக் கண்ணி
நாயனார் அடி அருச்சனை நியமும் நடாத்தி.
1862.
திருத்தர் பூவண வாணரைச் சேவித்துச் சுத்த
நிருத்தம் ஆடி வந்து அடியரைப் பொருள் என நினையும்
கருத்தளாய் அருச்சித்து அவர் களிப்ப இன் சுவை ஊண்
அருத்தி எஞ்சியது அருந்துவாள் அஃது அவள் நியமம்.

1863.
மாதர் இந் நெறி வழங்கும் நாள் மற்று அவள் அன்பை
பூதலத்து இடைத் தெருட்டு வான் பொன் மலை வல்லி
காதல் நாயகன் திரு உருக் காணிய உள்ளத்து
ஆதரம் கொடுத்து அருளினார் பூவணத்து ஐயர்.
1864.
ஐயர் தந்த பேர் அன்பு உரு ஆயினாள் மழுமான்
கையர் தன் திரு உருவினைக் கருவினால் கண்டு
மைய கண்ணினாள் வைகலும் வரு பொருள் எல்லாம்
பொய் இல் அன்பு கொண்டு அன்பர்தம் பூசையின் நேர்வாள்.
1865.
அடியர் பூசனைக்கு அன்றி எஞ்சாமையால் அடிகள்
வடிவு காண்பது எப்படி என்று மடி இலாச் செழியற்கு
கொடிவில் பொன் கிழி நல்கிய வள்ளலை உன்னிப்
பிடி அனாள் இருந்தாள் அஃது அறிந்தனன் பெருமான்.
1866.
துய்ய நீறு அணி மெய்யினர் கட்டங்கம் தொட்ட
கையர் யோகப் பட்டத்து இடைக் கட்டினர் பூதிப்
பையர் கோவணம் மிசை அசை உடையினர் பவளச்
செய்ய வேணியர் அங்கு ஒரு சித்தராய் வருவார்.
1867.
வந்து பொன் அனையாள் மணி மாளிகை குறுகி
அந்தம் இன்றி வந்து அமுது செய்வா ரொடும் அணுகிச்
சிந்தை வேறு கொண்டு அடைந்தவர் திருவமுது அருந்தாது
உந்து மாளிகைப் புறம் கடை ஒரு சிறை இருந்தார்.
1868.
அமுது செய் அரும் தவர் எலாம் அகல வேறு இருந்த
அமுத வாரியை அடிபணிந்து அடிச்சியர் ஐய
அமுது செய்வதற்கு உள் எழுந்து அருள்க என உங்கள்
அமுது அனாளை இங்கு அழை மின் என்று அருளலும் அனையார்.
1869.
முத்தரா முகிழ் வாள் நகை அல்குலாய் முக்கண்
அத்தவர் ஆனவர் தமர் எலாம் அமுது செய்து அகன்றார்
சித்தராய் ஒருதம் பிரான் சிறு நகையின ராய்
இத் தரா தலத்து யார் இருக்கின்றார் என்றார்.
1870.
நவ மணிக் கலன் பூத்த பூம் கெம்பரின் நடந்து
துவர் இதழ்க் கணி வாயினாள் சுவா கதம் அங்கு இலஎன்று
உவமை அற்றவர்க்கு அருக்கிய ஆசனம் உதவிப்

பவம் அகற்றிய வடிமலர் முடிஉறப் பணிந்தாள்.
1871.
எத்தவம் செய்தேன் இங்கு எழுந்து அருளுதற்கு என்னாச்
சித்தர் மேனியும் படி எழில் செல்வமும் நோக்கி
முத்த வாள் நகை அரும்ப நின்று அஞ்சலி முகிழ்ப்ப
அத்தர் நோக்கினார் அருள் கணார் அருள் வலைப் பட்டாள்.
1872.
ஐய உள் எழுந்து அருளுக அடிகள் நீர் அடியேன்
உய்ய வேண்டிய பணி திரு உளத்தினுக்கு இசையச்
செய்ய வல்லன் என்று அஞ்சலி செய்ய உள் நகையா
மையள் நோக்கியை நோக்கி மீன் நோக்கிதன் மணாளன்.
1873.
வடியை நேர் விழியாய் பெருவனப் பினை சிறிது உன்
கொடியை நேரிடை என விளைத்தனை எனக் கொன்றை
முடியினான் அடி ஆரம் மென் முகிழ் முலைக் கொடி தாழ்ந்து
அடிய னேற்கு வேறாய் ஒரு மெலிவு இலை ஐயா.
1874.
எங்கள் நாயகர் திரு உருக் காண்பதற்கு இதயம்
தங்கும் ஆசையால் கரு உருச் சமைத்தனன் முடிப் பேற்கு
இங்கு நாள் தொறும் என் கையில் வரும் பொருள் எல்லாம்
உங்கள் பூசைக்கே அல்லதை ஒழிந்தில என்றாள்.
1875.
அருந்து நல் அமுது அனையாள் அன்பு தித்திக்கத்
திருந்து தேன் என இரங்கு சொல் செவி மடுத்து ஐயர்
முருந்து மூரலாய் செல்வ மெய் இளமை நீர் மொக்குள்
இருந்த எல்லையும் நிலை சில என்பது துணிந்தாய்.
1876.
அதிக நல் அறம் நிற்பது என்று அறிந்தனை அறத்துள்
அதிகம் ஆம் சிவ புண்ணியம் சிவ அர்ச்சனை அவற்றுள்
அதிகம் ஆம் சிவ பூசையுள் அடியவர் பூசை
அதிகம் என்று அறிந்து அன்பரை அருச்சனை செய்வாய்.
1877.
உறுதி எய்தினை இருமையும் உன் பெயர்க்கு ஏற்ப
இறுதி இல்லவன் திரு உரு ஈகையால் காணப்
பெறுதியாக நின் மனைக் கிடை பித்தளை ஈயம்
அறுதியான பல் கலன்களும் கொணர்தி என்று அறைந்தார்.
1878.
ஈயம் செம்பு இரும்பிர சிதம் என்பவும் புணர்ப்பால்
தோயும் பித்தளை வெண்கலம் தரா முதல் தொடக்கத்து

ஆயும் பல் வகை உலோகமும் கல் என அலம்பத்
தேயும் சிற்றிடை கொண்டு போய்ச் சித்தர் முன் வைத்தாள்.
1879.
வைத்த வேறு வேறு உலோகமும் மழு உழை கரந்த
சித்த சாமிகள் நீற்றினைச் சிதறினர் பார்த்தே
இத்தை நீ இரா எரியில் இட்டு எடுக்கின் பொன் ஆம்
அத்தை நாயகன் திருஉக் கொள்க என அறைந்தார்.
1880.
மங்கை பாகரை மடந்தையும் இங்கு நீர் வதிந்து
கங்குல் வாய் அமுது அருந்தி இக் காரியம் முடித்துப்
பொங்கு கார் இருள் புலரும் முன் போம் எனப் புகன்றாள்
அம் கயல் கண் ஆள் தனைப் பிரியார் அதற்கு இசையார்.
1881.
சிறந்த மாட நீள் மதுரையில் சித்தர் யாம் என்று
மறைந்து போயினார் மறைந்த பின் சித்தராய் வந்தார்
அறைந்த வார் கழல் வலம்பிட வெள்ளி மன்று ஆடி
நிறைந்த பேர் ஒளியாய் உறை நிருத்தர் என்று அறிந்தாள்.
1882.
மறைந்து போயினார் எனச் சிறிது அயர்ச்சியும் மனத்தில்
நிறைந்த ஓர் பெரும் கவர்ச்சியை நீக்கினார் என்னச்
சிறந்து ஓர் பெரும் மகிழ்ச்சியும் உடைய வளாய்ச் சித்தர்
அறைந்தவாறு தீப் பெய் தனன் உலோகங்கள் அனைத்தும்.
1883.
அழல் அடைந்த பின் இருள் மல வலி திரிந்து அரன் தாள்
நிழல் அடைந்தவர் காட்சி போல் நீப்பரும் களங்கம்
கழல வாடகம் ஆனதால் அது கொண்டு கனிந்த
மழலை ஈர்ஞ் சொலாள் கண்டனள் வடிவு இலான் வடிவம்.
1884.
மழ விடை உடையான் மேனி வனப் பினை நோக்கிஅச்சோ
அழகிய பிரானோ என்னா அள்ளி முத்தம் கொண்டுஅன்பில்
பழகிய பரனை ஆனாப் பரிவினால் பதிட்டை செய்து
விழவு தேர் நடாத்திச் சில் நாள் கழிந்த பின் வீடு பெற்றாள்.
1885.
நையும் நுண் இடையினாள் அந் நாயகன் கபோலத்து இட்ட
கை உகிர்க் குறியும் சொன்ன காரணக் குறியும் கொண்டு
வெய்ய வெம் கதிர் கால் செம் பொன் மேனி வேறு ஆகி நாலாம்
பொய் உகத்தவருக்குத் தக்க பொருந்து உருவு ஆகி மன்னும்.

•••••

அருள்மிகு சோமசுந்தரேசுவரர் மதுரையிலிருந்து புறப்பட்டுச்
சித்தர் வடிவில் திருப்பூவணம் வந்து, இரசவாதம் செய்து
36ஆவது திருவிளையாடலை நிகழ்த்தித் தங்கம் தயாரித்துக்
கொடுத்துள்ளார். அந்தத் தங்கத்தைக்கொண்டு திருப்பூவணம்
உற்சவமூர்த்தியை ஸ்ரீ பொன்னனையாள் செய்து
தேர்த்திருவிழா நடத்தியுள்ளாள்



நூலாக்கம்
காசிஸ்ரீ முனைவர் நா.ரா.கி. காளைராசன்
திருவிளையாடல் புராணம் ஆராய்ச்சி மைய அமைப்பாளர்
(மேனாள் துணைப்பதிவாளர், அழகப்பா பல்கலைக்கழகம்)